Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167292

1. District : திருப்பூர். PS: உடு.கு.மங்கலம் Year: FIR No.: 09/AC1/2025 Date:
மாவட்டம் காவல்நிலையம் திருப்பூர் ஆண்டு முத.அ. எண் நாள் 16.10.202

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 மற்று Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita 2023. Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 15-10-2025 Date to : 15-10 மணிக்கு மேல்
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 16.10.25 Time to : 10.00 மணி
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ. வடகிழக்கு
Beat Number : (b) Address : மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி கைகாட்டிபுதூர், பெருமாநல்லூர் மெயின்ரோடு, பழங்கரை, அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N.C. ஜலந்தர் சிங் (b) Father's/ Husband's Name : N.C. கொடுத்தி சிங்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 09.3.1971 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : கோவில் தணைச் (g) Address : உழவர் சந்தை மற்றும் கண்காணிப்பு பணி
தொழில் கண்காணிப்பாளர். முகவரி திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. S. இளஞ்செழியன், மோட்டார் வாகன ஆய்வாளர் இனவி-1 கைகாட்டிபுதூர், பெருமாநல்லூர் மெயின்ரோடு, பழங்கரை, அவினாசி வட்டம், திருப்பூர் DT
மற்று 5 நபர்கள் (விபரம் தனித்தாகவே இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

பதிவம் 91. நகர் 16-10-2015 ல் மேல் அனுப்பவைக்கப்பட்டது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

வலைத் தகவல் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/10/2015

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

16/10/2015

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

N.K. Ravichandran

Name: பெயர் ... Deputy Superintendent

Rank: நிலை ... of Police No. எண் .....

Tirupur.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.10.2015 13 மணி.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2025/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –7 இன் தொடர்ச்சி.,

எதிரிகளின் பட்டியல்

1) திரு.A.குமரன், (57/25), த/பெ.ஆறுமுகம், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–I, பகுதி அலுவலகம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், கைகாட்டிபுதூர், பெருமாநல்லூர் மெயின் ரோடு, பழங்கரை, அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம், (இருப்பிட முகவரி: கதவு எண்.IV E, ஸ்ரீ சக்தி ரெசிடன்சி அபார்ட்மெண்ட், அம்மன் நகர், சிறுபூலுவபட்டி, திருப்பூர்–641602.

2) திரு.N.ராமகிருஷ்ணன், (53/25), த/பெ.G.நஞ்சன், இரவு காவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், அவினாசி பகுதி அலுவலகம், கைகாட்டிபுதூர், பெருமாநல்லூர் மெயின் ரோடு, பழங்கரை, அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.3/251, சுண்டட்டி கிராமம், கொடநாடு அஞ்சல், கோத்தகிரி தாலுகா, நீலகிரி மாவட்டம்.

3) திரு.G.சபரிநாதன், (34/25), த/பெ.மு.கணேசன், தரவு உள்ளீடு பணியாளர் (Data Entry Operator), மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், அவினாசி பகுதி அலுவலகம், கைகாட்டிபுதூர், பெருமாநல்லூர் மெயின் ரோடு, பழங்கரை, அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.134, சக்தி நாராயணா வீதி, சிறுமுகை, கோயமுத்தூர் மாவட்டம்).

4) திரு.M.முத்துகிருஷ்ணன், (31/25), த/பெ.முருகேசன், கதவு எண்.2/63 G, பாலாஜி நகர், செங்கப்பள்ளி, திருப்பூர்.

5) திரு.T.குமார், (45/25), த/பெ.திருமூர்த்தி, தங்கநாயகி ஜெராக்ஸ், கதவு எண்.1/27, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அருகில், பழங்கரை, அவினாசி, திருப்பூர் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.3/27, சுண்டக்காம்பாளையம் பிரிவு, நம்பியாம்பாளையம், அவினாசி, திருப்பூர் மாவட்டம்).

6) திரு.M.கார்த்திகேயன், (46/25), த/பெ.மு.முனுசாமி, கதவு எண்.175, பாலாஜி நகர், ராக்கியாபாளையம், அவினாசி தாலுகா, திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2025/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –12 இன் விபரம்.,

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் 15.10.2025 ஆம் தேதி புதன்கிழமை 15.30 மணி முதல் 23.20 மணி வரை திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், பழங்கரை, பெருமாநல்லூர் மெயின் ரோடு கைகாட்டிபுதூரில் செயல்பட்டு வரும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 16.10.2025 ஆம் தேதி வியாழக்கிழமை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2025, U/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் விபரம் பின்வருமாறு:

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், பழங்கரை, பெருமாநல்லூர் மெயின் ரோடு, கைகாட்டிபுதூரில் செயல்பட்டு வரும் அவினாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரியும் திரு. A. குமரன் தனது பதவியை பயன்படுத்தி அங்குள்ள தனிநபர் புரோக்கர்கள் மூலமாகவும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தினை ஒட்டி கிழக்கு பக்கமாக வெளியில் MVI அலுவலகப் பணிகளுக்கு ஆன்லைன் சர்வீசஸ், ஜெராக்ஸ் எடுத்துக் கொடுக்கும் கடைகள் நடத்தி வரும் நபர்கள் மூலம் அவினாசி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து புதிய வாகனப் பதிவு, தற்காலிக வாகனப்பதிவு, பழைய வாகன பதிவு புதுப்பித்தல், தகுதிச் சான்று புதுப்பித்தல், தற்காலிக ஓட்டுநர் உரிமம் வழங்குதல், புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குதல், உரிமம் மேற்குறிப்பு வழங்குதல், பொதுப்பணி வில்லை வழங்குதல் ஆகியவற்றிற்காக வரும் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களிட்ம் லஞ்சமாக பணம் கேட்டு வசூலிப்பதாகவும், புரோக்கர்கள் அலுவலக பதிவேடுகளை கையாண்டு அந்த தொகைகளை வசூலித்து வருவதாகவும், அலுவலக நேரத்திலும் அதற்கு பின்னரும் 15.10.2025 ஆம் தேதியன்று கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. B. கீதாலட்சுமி, அரசு சாட்சிகள் திரு. M.ஈஸ்வரமூர்த்தி, தேர்தல் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,

தாராபுரம், திருப்பூர் மாவட்டம், திரு. K. இளமுருகன், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர், மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலகம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம் மற்றும் மற்றும் காவலர்கள் குழுவினருடன் 15.10.2025 ஆம் தேதி மாலை 15.35 மணியளவில் திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், பழங்கரை, பெருமாநல்லூர் மெயின் ரோடு, கைகாட்டிபுதூரில் தெற்கு பார்த்தவாறு வாயில் கொண்ட அவினாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் சோதனைக்காக உள்ளே வரப்பட்டது.

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் வெளிப்பகுதி, தரைத்தளத்தில் உள்ள வராண்டா, மோட்டார் வாகன ஆய்வாளர் அறை, மோட்டார் வாகன ஆய்வாளரின் கண்காணிப்பாளர் அலுவலகம், உதவியாளர்கள் அறை, கணினி அறை, பதிவுறு எழுத்தர் ஆகிய அறைகளில் இருந்து அலுவலர்கள் யாரும் வெளியில் செல்லாத வகையில் காவலர்களைக் கொண்டு காப்பு போடப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு முன்பாக கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் பறிமுதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களின் அருகில் ஆங்காங்கே நின்றுகொண்டிருந்த நபர்களை விசாரித்து அவர்களை காவலர்கள் மூலமாக மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக வளாகத்திற்குள் அழைத்து வரப்பட்டு காவலர்கள் கொண்டு காப்பு போடப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்து தரைத்தளத்தில் உள்ள வராண்டாவின் கிழக்கு பக்கத்தில் TN 39 G 0190 என்ற Bolero அரசு வாகனமும், வராண்டாவின் மேற்கு பக்கத்தில் TN 06 G 2803 என்ற Alto K10 என்ற ஓட்டுனர் தேர்வுக்காக பயன்படுத்தப்படும் அரசு வாகனமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களுக்கு வடக்குபுறம் உள்ள சிட்அவுட்டில் அலுவலகத்தின் முகப்பில் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவர் தனது பெயர் ராமகிருஷ்ணன் என்றும் தான் அலுவலக காவலாளியாக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அந்த சிட்அவுட்டிற்கும் வடக்கு பக்கத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் நுழைந்தபோது மோட்டார் வாகன ஆய்வாளர் அந்த அறையின் மேற்கு பக்கம் கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் நான் என்னையும் என்னுடன் வந்திருந்த குழுவினரையும் அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ள வந்திருப்பதாக தகவல் தெவித்து, அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் A. குமரன் என்றும் தான் மோட்டார் வாகன ஆய்வாளராக அவினாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் 23.04.2025 ஆம் தேதி முதல் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அதன் பின்னர் சோதனைக்குழுவினர் சந்தேகத்தின் அடிப்படையில் மோட்டார் வாகன

ஆய்வாளர் அலுவலகத்திற்கு முன்புறம் உள்ள சிட் அவுட்டில் அமர்ந்திருந்த காவலாளி திரு. ந. ராமகிருஷ்ணன் என்பவரிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர் 21.02.2018 ஆம் தேதி முதல் காவலராக பணியாற்றி வருவதாகவும், தான் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலமாக பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும், தனக்கு மாத சம்பளம் ரூ.23,000 என்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலமாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தனது சொந்த ஊர் கோத்தகிரி என்றும் எனவே தான் இங்கேயே அலுவலகத்தில் தங்கியிருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் பின்பக்க வலது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் எவ்வளவு தொகைஉள்ளது என்று கேட்டபோது அதில் எவ்வளவு தொகை உள்ளது என்று அவரால் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. எனவே அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் முதலாவது கட்டில் 4 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.2,000 மும், இரண்டாவது கட்டில் ஒரு ஐநூறு ரூபாய் நோட்டு, 5 இருநூறு ரூபாய் நோட்டுக்களும், 6 நூறு ரூபாய் நோட்டுக்களும் ஆக ரூ.2,100 ம் ஆக மொத்தம் ரூ.4,100/– இருந்தது. அந்த தொகை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது ஒட்டுனர் உரிமத்தை புதுப்பிப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாததால் அந்ததொகை **ரூ.4,100/–** விசாரணைக்காக காவல் துணைக் கண்காணிப்பாளரால் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம்வேறு தொகை ஏதாவது வைத்துள்ளீர்களாக என்று கேட்டபோது அவர் தனது சர்ட்டின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.70 இருந்தது பற்றி கேட்டபோது அவர் கைச்செலவிற்கு வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடம் வேறு ஏதாவது தொகை உள்ளதாக என்று கேட்டபோது அவர் தன்னிடம் வேறு தொகை எதுவும் இல்லை என்று தெரிவித்தார். அதன் பின்னர் சோதனைக்குழுவினர் அவர் முன்பிருந்த டேபிளின் இடது மற்றும் வலது பக்கங்களில் இருந்த ரேக்குகளில் சோதனை செய்தபோது பணம் எதுவும் காணப்படவிலை. இடது பக்க கீழ் ரேக்கில் ஒரு சுவீட் பாக்ஸ் மற்றும் ஒரு புதிய வேட்டி மற்றம் சட்டை ஆகியவைகள் அடங்கிய கவர் ஒன்றும் இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் அவற்றை தான் வாங்கிவந்து வைத்துள்ளதாக தெரிவித்தார். அதன் பின்னர் அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்பக்கமாக வைக்கப்பட்டுள்ள சுமார் 4 அடி உயரம் கொண்ட மர பீரோவில் சோதனை செய்தபோது அது 4 ரேக்குகள் கொண்டதாக

உள்ளது. அதில் மேல் ரேக்கில் டீ குடிக்க பயன்படும் டம்ளர்கள், மற்றும் பிளாஸ்க், தண்ணீர் பாட்டில் போன்றவைகள் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு கீழ் உள்ள ரேக்கில் சில ஆவணங்களும் அதற்கு கீழ் உள்ள ரேக்கில் அவருடைய துணிகள் அடங்கிய பை ஒன்றும், கீழ் ரேக்கில் போர்வைகள் மற்றும் துணிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலிருந்து கீழாக மூன்று ரேக்குகளை சோதனை செய்தபோது அதில் பணமோ அல்லது சந்தேகப்படும்படியான பொருளோ எதுவும் காணப்படவில்லை. கீழ்ரேக்கில் வைக்கப்பட்டுள்ள இரட்சீட்டுகளை சோதனை செய்தபோது அதில் ஒரு பெட்சீட்டின் உள்ளே ரூபாய் நோட்டுக்கள் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த தொகையை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 46 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.23,000 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சம்பள பணம் என்று தெரிவித்தார். அவரிடம் சம்பளம் எவ்வாறு அவருக்கு வழங்கப்படுகிறது என்று கேட்டபோது அவரது வங்கி கணக்கில் சம்பள தொகை வந்து விடும் என்று தெரிவித்தார். அவ்வாறு வங்கி கணக்கில் சம்பள பணம் பெறப்படும்போது எதற்காக தாங்கள் ரொக்கமாக தொகை வைத்துள்ளீர்கள் என்றும், சற்று முன்னர் வேறு தொகை ஏதாவது வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது வேறு தொகை எதுவும் தன்னிடம் இல்லை என்று தெரிவித்தீர்களே ஏன் அவ்வாறு கூறினீர்கள் என்று கேட்டபோது அவர் பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். எனவே அவர் அந்த தொகை வைத்திருந்த விதம் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததால் அந்த தொகை ரூ. 23,000 ம் சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக காவல் துணைக் கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக காவலாளி திரு. ந. ராமகிருஷ்ணனை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த சிட்அவுட்டிற்கு வடக்கு புறம் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. A. குமரன் அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது பேன்டின் பின்பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 2 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 2 நூறு ரூபாய் நோட்டுக்கள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 3 இருபது ரூபாய் நோட்டுக்கள், 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ. 720 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்து அந்த தொகையை காலை அலுவலகம் வந்தபோது அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அந்த ரொக்க கையிருப்பு பதிவேட்டை அவரிடம் இருந்து பெற்று பரிசீலனை செய்தபோது அது "இப்பதிவேடு பக்கம் 1 முதல் 156 வரையிலான பக்கங்கள் கொண்டுள்ளது என சான்று செய்யப்படுகிறது" என சான்று செய்யப்பட்டு மோட்டார் வாகன

ஆய்வாளர், அவிநாசி, திருப்பூர் வட்டம் என்ற சீல் வைக்கப்பட்டுள்ளது. அதில் பக்கம் 138 ல் 15.10.25 என்று தேதி குறிப்பிடப்பட்டு அதில் வரிசை எண். 1 ல் அ. குமரன் என்று எழுதப்பட்டு ரூ.720 என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த ஆவணம் பக்கம் 138 ல் 15.10.25 ஆம் தேதி இறுதியில் மோட்டார் வாகன ஆய்வாளர் கையொப்பம் செய்துள்ளார். அதன்பின்னர் அவர் அமர்ந்திருந்த இருக்கை முன்பு போடப்பட்டிருந்த மேசையில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேசையின் மேலிருந்த ஆவணங்கள் மற்றும் மேசையின் இரண்டு புறமும் உள்ள ரேக்குகளில் சோதனை மேற்கொண்டபோது அதில் பணமோ பொருளோ எதுவும் காணப்படவில்லை. அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்பக்கமாக போடப்பட்டிருந்த இரும்பு பீரோவை சோதனை செய்தபோது அது சுமார் 7 அடிகள் உயரம் கொண்டதாக உள்ளது. அதில் மேலிருந்து கீழாக 5 ரேக்குகள் கொண்டதாக உள்ளது. அதில் சோதனை செய்தபோது அந்த ரேக்குகளில் ஆவணங்கள், பிரிண்ட் எடுக்க பயன்படும் பேப்பர்கள், போன்றவைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அவற்றை சோதனை செய்தபோது அதில் சந்தேகப்படும்படியான பணமோ அல்லது பொருளோ எதுவும் காணப்படவில்லை. அந்த இரும்பு பீரோவிற்கு வடக்காக அந்த அறையின் வடமேற்கு மூலையில் மேற்குபுற சுவற்றை ஒட்டியவாறு போடப்பட்டிருந்த கணினி டேபிள் மற்றும் ஒரு ரேக்கில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அவற்றை சோதனை செய்தபோது அதில் சந்தேகப்படும்படியான பொருளோ அல்லது பணமோ காணப்படவில்லை. அந்த கணினி டேபிள் மற்றும் ரேக் ஆகியவற்றிற்கும் மேற்குபுற சுவற்றிற்கும் இடையே சோதனை செய்தபோது அங்கு சந்தேகப்படும்படியான பொருட்களோ அல்லது பணமோ காணப்படவில்லை. கணினி டேபிளுக்கும் தெற்காக உள்ள இரும்பு பீரோவிற்கும் மேற்கு புற சுவற்றிற்கும் இடையே சோதனை செய்தபோது அங்கு ஒரு காக்கி நிற கவர் காணப்பட்டது. அந்த கவரை சாட்சிகள் முன்னிலையில் எடுத்தபோது அந்த கவரின் மேல்பகுதியில் ஒட்டடை குப்பை ஒட்டியவாறு இருந்தது. அந்த குப்பைகளை சுத்தம் செய்த பின்னர் அந்த கவரை பிரித்து அதன் உள்ளே என்ன உள்ளது என்று பார்த்தபோது அந்த கவரின் உள்ளே ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.50,000 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனக்கு அந்த தொகை எவ்வாறு அங்கு வந்தது என்று தெரியவில்லை என்று கூறினார். எனவே இரும்பு பீரோவிற்கும் மேற்கு பக்க சுவற்றிற்கும் இடையே காக்கி நிற கவரில் வைக்கப்பட்டிருந்த கேட்பாரற்று கிடந்த ரூ.50,000 சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகை பற்றி அலுவலகத்தில் பணியில் இருந்த அனைவரிடத்திலும் கேட்டபோது தங்களுக்கு அந்த

தொகை பற்றி எந்த ஒரு விபரமும் தெரியாது என்று தெரிவித்தனர். இது தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. A. குமரன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அறைக்கு வடக்கே உள்ள அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறையானது மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக கண்காணிப்பாளர் அறையாகும். அந்த அறையில் இருந்த நபரிடம் விசாரிக்க அவர் தனது பெயர் பி. அருணாச்சாலம் என்றும் தான் 13.08.2025 ஆம் தேதி முதல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது பேன்டின் வலதுமுன்பக்க பாக்கெட்டில் இருந்த கருப்பு நிற பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 5 நூறு ரூபாய் நோட்டுக்கள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ. 560 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று டாக்டரை பார்ப்பதற்காக செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்து 14.10.2025 ஆம் தேதி மருத்துவமனை சென்றதற்கான மருத்துவச்சீட்டை காண்பித்தார். மேலும் அலுவலகத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் தான் அந்த தொகையை தினசரி ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அந்த அறை முழுவதும் சோதனை செய்தபோது வேறு பணமோ அல்லது பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் அந்த அறைக்கு வடக்கே உள்ள அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறையானது உதவியாளர் அறையாகும். அந்த அறையில் உதவியாளர் திருமதி. சு. சசிதேவி அவர்கள் பணியில் இருந்தார். அவரிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர் 03.10.2025 ஆம் தேதிமுதல் உதவியாளராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது கைப்பையில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 1 ஐநூறு ரூபாய் நோட்டு, 1 நூறு ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு, 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ. 630 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ள தொகை என்று தெரிவித்தார். மேலும் அந்த தொகையை தினசரி ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். தினசரி ரொக்க கையிருப்பு பதிவேடு பக்கம் 138 யை பரிசீலனை செய்தபோது 15.10.25 ஆம் தேதி வரிசை எண். 3 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி

ஒப்படைக்கப்பட்டது. அந்த அறை முழுவதும் சோதனை செய்தபோது அங்கு வேறு பணமோ அல்லது பொருளோ காணப்படவில்லை. அந்த அறையில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த அறையில் அலுவலில் இருந்த மற்றொரு நபரைப்பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் மு. ஷேக்முகமது என்றும், தான் இளநிலை உதவியாளராக 24.04.2025 ஆம் தேதி முதல் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பக்க பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 1 இருநூறு ரூபாய் நோட்டு, 1 நூறு ரூபாய் நோட்டு, 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ. 370 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ள தொகை என்று தெரிவித்தார். மேலும் அவர் காலையில் அலுவலகம் வந்தபோது ரூ.600 கொண்டு வந்திருந்ததாகவும், அந்த தொகையை தினசரி ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். தினசரி ரொக்க கையிருப்பு திவேடு பக்கம் 138 யை பரிசீலனை செய்தபோது 15.10.25 ஆம் தேதி வரிசை எண். 4 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மதிய உணவிற்கு போக மீதி தொகை ரூ.370 வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையில் சோதனையின் போது வேறு பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. அதன் பிறகு உதவியாளர் அறைக்கு கிழக்கு பக்கம் உள்ள அறையில் சோதனை மேற்கொண்டபோது அந்த அறையில் இருந்த நபரைப்பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் மதன் என்றும், தான் இளநிலை உதவியாளராக 23.04.2025 ஆம் தேதி முதல் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது இடது பக்க சர்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து ஆஜர் செய்து அந்த தொகை தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். மேலும் அவர் காலையில் அலுவலகம் வந்தபோது ரூ.200 கொண்டு வந்திருந்ததாகவும், அந்த தொகையை தினசரி ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். தினசரி ரொக்க கையிருப்பு பதிவேடு பக்கம் 138 யை பரிசீலனை செய்தபோது 15.10.25 ஆம் தேதி வரிசை எண். 5 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மதிய உணவிற்கு போக மீதி தொகை ரூ.100 வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையில் சோதனையின்

போது வேறு பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. அதன் பிறகு அந்த அறைக்கு தெற்கு பக்கம் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் கணினி அறையை சோதனை செய்யப்பட்டது . அந்த அறையில் இருந்தவரிடம் விசாரித்தபோது அவர் தனது பெயர் நாகமணி என்றும் தான் 27.03.2013 முதல் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது கைப்பையில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார் அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 1 இருநூறு ரூபாய் நோட்டு, 5 நூறு ரூபாய் நோட்டுகள், 3 இருபது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ. 760 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ள தொகை என்று தெரிவித்தார். மேலும் அவர் காலையில் அலுவலகம் வந்தபோது ரூ.760 கொண்டு வந்திருந்ததாகவும், அந்த தொகையை தினசரி ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். தினசரி ரொக்க கையிருப்பு பதிவேடு பக்கம் 138 யை பரிசீலனை செய்தபோது 15.10.25 ஆம் தேதி வரிசை எண். 6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு பின்பக்கம் உள்ள BONTON அறையில் சோதனை மேற்கொள்ளச் சென்றபோது அந்த அறையில் இருந்த நபர் தனது பாக்கெட்டில் இருந்து எதையோ எடுத்து அங்கிருந்த பிரிண்டர் உள்பகுதியில் வைத்தார். அந்த நபரை பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் சபரிநாதன் என்றும் தான் 20.01.2025 ஆம் தேதி முதல் Data Entry Operator ஆக பணியாற்றி வருவதாகவும், தனது முக்கியமான வேலை போட்டோ எடுத்தல், ஓட்டுனர் உரிமம் பிரிண்ட் செய்தல், ஆர்சி புக் சுமார்ட் கார்டு பிரிண்ட் செய்தல் போன்ற வேலைகள் செய்து வருவதாக கூறினார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது முதலில் தன்னிடம் தொகை எதுவும் இல்லை என்று கூறினார். பின்னர் அந்த அறையை சோதனை செய்தபோது அந்த அறையில் மேற்குபக்க சுவர் ஓரமாக டேபிளில் வைக்கப்பட்டிருந்த டேட்டா கார்டு பிரிண்டர் ரிப்பன் எடுக்கும் பகுதியில் ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எடுத்து பார்த்தபோது அது இரண்டு கத்தைகளாக இருந்ததது. அதில் முதலாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்தபோது அதில் 4 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 3 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 12 நூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.3,800 ம், இரண்டாவது கத்தையில் 6 நூறு ரூபாய் நோட்டுகள், 1 இருநூறு ரூபாய் நோட்டு, 4 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ. 1,000 ஆக இரண்டு கத்தைகளில் சேர்த்து மொத்தம் ரூ.4,800 இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் கழுகு

மலையில் சீட்டு நடத்துவதற்கு கொடுக்க வேண்டிய தொகை என்று தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாததால் அந்த தொகை மொத்தம் ரூ.4,800/- ம் விசாரணைக்காக சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அந்த அறையில் வேறு பணமோ பொருளோ காணப்படவில்லை. திரு. சபரிநாதன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் சோதனைக்குழுவினர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அந்த அலுவலகத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த நபர்களை சந்தேகத்தின்பேரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குள் காவலர்கள் மூலம் அழைத்து வந்து காப்பில் இருந்த ஒரு நபரை அழைத்து விசாரித்த போது அவர் தனது பெயர் எம். முத்துகிருஷ்ணன் என்றும், தான் ஆர்சி புத்தகம் பெயர் மாற்றுதல், ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் புதிதாக எடுத்துக் கொடுத்தல், கனரக வாகனங்கள் ஓட்டுதலுக்கு பேட்ச் போடுதல் போன்ற வேலைகளை செய்து கொடுத்து அதற்கு தனியாக சர்வீஸ் சார்ஜ் பெற்றுக் கொள்வதாகவும், அனைத்து வேலைகளுக்கான தொகைகளையும் ஆன்லைன் மூலமாகவே செலுத்துவதாகவும், இன்று பாரதி வித்யா பள்ளியின் வாகனத்தை ஆய்வுக்காக கொண்டு வந்த வேலை தொடர்பாக வந்திருந்ததாகவும், தான் அலுவலகத்திற்கு முன்பு நின்றிருந்தபோது என்னை விசாரணைக்காக அலுவலகத்திற்குள் அழைத்து வந்தார்கள் என்று தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவரின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து இரண்டு கத்தைகளாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் முதலாவது கத்தையில் 15 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.3,000 மும், 20 நூறு ரூபாய் நோட்டுகள் ரூ.2,000 மும் ஆக ரூ.5,000 மும், இரண்டாவது கத்தையில் 63 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.31,500 ம், 4 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.800 ம், 1 நூறு ரூபாய் நோட்டு ஆக ரூ.100 ம், ஆக மொத்தம் ரூ.32,400 ம் ஆக இரண்டு கட்டுகளிலும் சேர்த்து மொத்தம் ரூ.37,400 இருந்தது பற்றி கேட்டபோது அவர் இன்று ஒரு சீட்டு உள்ளதாகவும் அந்த சீட்டிற்கு கட்ட வைத்துள்ள தொகை என்று கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளப்படாமல் அந்த தொகை மொத்தம் ரூ.37,400 ம் விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அவரிடம் வேறு தொகை ஏதாவது வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது அவரின் சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து கத்தைகளாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் முதலாவது கத்தையில் 1 ஐநூறு ரூபாய் நோட்டும், இரண்டாவது கத்தையில் 5 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.2,500 ம், 2 நூறு ரூபாய் நோட்டுகள் ரூ.200 ம் ஆக ரூ.2,700 ம், மூன்றாவது கத்தையில் 1 ஐநூறு ரூபாய் நோட்டு

ரூ.500 ம், 8 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.1,600 ம், 1 நூறு ரூபாய் நோட்டு ஆக ரூ.100 ம், ஆக ரூ.2,200 ம் ஆக மொத்தம் மூன்று கட்டுகளிலும் சேர்த்து மொத்தம் ரூ.5,400 இருந்தது பற்றி கேட்டபோது அவர் தனது வாடிக்கையாளர்களிடம் இருந்து பெற்ற தொகை என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.5,400 ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவர் சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ஆஜர் படுத்திய 2 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள், 5 இருபது ரூபாய் நோட்டுக்கள், 3 பத்து ரூபாய் நோட்டுக்கள், ஆக மொத்தம் ரூ.230ம், மற்றும் 2 இருபது ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 1 பத்து ரூபாய் நோட்டு ஆக ரூ.50 ம், ஆக மொத்தம் ரூ.280 தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த தொகை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. விசாரணையின்போது 14.10.2025 என்று தேதி குறிப்பிடப்பட்டு அவர் கைப்பட நீல நிற பேனாவால் விவரங்கள் எழுதப்பட்டுள்ள ஒரு தாள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு. முத்துகிருஷ்ணனை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் காவலர்கள் கண்காணிப்பில் இருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் தி. குமார் என்றும் தான் தங்கநாயகி ஜெராக்ஸ் என்ற பெயரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு கிழக்குபக்கமாக வைத்து நடத்திவருவதாகவும், தனது கடையில் ஜெராக்ஸ் எடுத்து கொடுத்தல், ஆன்லைனில் பணம் கட்டுதல், Insurance எடுத்து தருதல் போன்ற வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவரின் சர்ட்டின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.5,000 மும், 5 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ரூ.1,000, 1 நூறு ரூபாய் நோட்டு ரூ.100 ம் ஆக ரூ.6,100 இருந்தது. அந்த தொகை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் சீட்டு கட்டுவதற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை மொத்தம் ரூ.6,100 ம் விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் வேறு ஏதாவது தொகை வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது அவரின் இடது பக்க பேண்டின் முன்பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்கள் இரண்டு கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் முதலாவது கத்தையில் 36 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 5 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.19,000 ம், மற்றும் இரண்டாவது கத்தையில் 19 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 18 இருநூறு ரூபாய்

நோட்டுக்கள் மற்றும் 6 நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.13,700 ம் ஆக இரண்டு கட்டுக்களிலும் சேர்ந்து மொத்தம் ரூ.32,700 இருந்தது பற்றி அவரிடம் விசாரித்தபோது அவர் அந்த தொகை சீட்டு கட்டுவதற்கு வைத்துள்ள தொகை என்று கூறினார். அவர் கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை மொத்தம் ரூ.32,700 ம் விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. திரு. தி. குமாரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் காவலர்கள் கண்காணிப்பில் இருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் எம். கார்த்திகேயன் என்றும் தான் கன்சல்டிங் வேலை செய்து வருவதாகம், லைசென்ஸ் எடுத்து கொடுத்தல், புக் பெயர் மாற்றம் செய்து கொடுத்தல், Insurance எடுத்து தருதல் போன்ற வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். தான் தனது புரோக்கர் தொழிலுக்கு தனியாக கடை எதுவும் நடத்தவில்லை என்றும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவரின் பேட்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 16 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.8,000 இருந்தது. அது பற்றி கேட்டபோது ஜேசிபி Insurance எடுத்து கொடுப்பதற்காக வாங்கிய பணம் என்று தெரிவித்தார். அவர் தெரிவத்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை மொத்தம் ரூ.8,000 ம் விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அவரிடம் வேறு தொகை ஏதாவது வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது அவரின் பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 1 இறுநூறு ரூபாய் நோட்டு, 1 ஐம்பது ரூபாய் நோட்டு ஆக ரூ.1,250 இருந்தது. அந்த தொகை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்துள்ள பணம் என்று கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக திரு. எம். கார்த்திகேயன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அலுவலகப் பணியாளர்கள் வருகைப்பதிவேடு பற்றி கேட்டபோது வட்டார போக்குவரத்து அலுவலகம், பகுதி அலுவலகம், அவிநாசி 2025 ஆம் வருடத்திற்கான வருகைப் பதிவேட்டினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டை பார்வையிட்டதில் பக்கம் 39 ல் மோட்டார் வாகன ஆய்வார் திரு. ஆ. குமரன் அவர்கள் அலுவலகம் வருகை தந்ததற்கு கையொப்பம் செய்துள்ளார். கண்காணிப்பாளர் திரு. ப. அருணாச்சலம், உதவியாளர் திருமதி. சு. சசிதேவி, இளநிலை உதவியாளர் திரு. ம. மதன்,

இளநிலை உதவியாளர் திரு. மு. ஷேக்முகமது ஆகியோர் அலுவலகம் வந்தமைக்காக கையொப்பம் செய்துள்ளனர். அந்த வருகைப்பதிவேடு விசாரணைக்காக காவல் துணைக் கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் இரவுக் காவலர் வருகைப்பதிவேடு பற்றி கேட்டபோது அந்த பதிவேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டை பார்வையிட்டதில் பக்கம் 21 ல் 15.10.2025 ஆம் தேதி அலுவலகம் வருகை புரிந்ததற்கு இரவுக் காவலர் திரு. ந. ராமகிருஷ்ணன் ஒப்பம் செய்துள்ளார். அந்த பதிவேட்டிலேயே BONTON பணியாளர் திரு. சபரிநாதனும் கையொப்பம் செய்துள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளரும் கையொப்பம் செய்துள்ளார். அந்த இரவுக் காவலர் வருகைப்பதிவேடும் காவல் துணைக் கண்காணிப்பாளரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ரொக்க கையிருப்பு பதிவேடு பக்கம் 1 முதல் 155 முடிய உள்ளது காவல் துணைக் கண்காணிப்பாளரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவிநாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் 15.10.2025 ஆம் தேதி அரசு கணக்கில் Dealer Online Collection மொத்தம் ரூ.17,36,260 ம், Online collection மொத்தம் ரூ.1,81,775 ம், ஆக மொத்தம் ரூ.19,18,035 வசூல் ஆகியுள்ளது தொடர்பான 15.10.2025 ஆம் தேதிக்கான Account Statement Report பிரிண்ட் எடுக்கப்பட்டு சான்று பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவிநாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் நடைபெற்ற வேலைகள் தொடர்பான (1) Driving Licence Register – Issue of Driving Licence- 1 page, (2) Change Of Address in DL – 1 Page, (3) Fitness Issue report dated 15.10.2025, Printed by Tr. Arunachalam, P (Page No. 1 to 5) மொத்தம் 4 பக்கங்கள், (4) Issue of Badge to a driver – 1 Page, (5) Renewal of Driving Licence for the day 15.10.2025 (Page No. 1 and 2) (6) Learners License Issued report dated 15.10.2025 Page No. 1 and 2) (7) Vehicle Registration Summary Report Page No.1 ஆகியவைகள் பிரிண்ட் எடுக்கப்பட்டு அதில் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்பம் பெறப்பட்டு காவல் துணைக் கண்காணிப்பாளரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையானது 15.10.2025 இரவு 23.20 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/எதிரிகள் உரிய விளக்கம் அளிக்காததாலும், அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ, அவர்களால் பெறப்பட்டிருக்ககூடும் என்றும் எதிரிகள் கொண்டு வந்திருந்த தொகை அவினாசி மோட்டார்

வாகன ஆய்வாளர் நிலை–I திரு.A.குமரன் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்ககூடும் என்றும் சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும் இயக்குனர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்தரவு பெற்று மேற்படி எதிரிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் மீது இன்று 16.10.2025 ம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2025/TPR u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல் முறை நடவடிக்கையின் அசல், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை மாண்பமை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

16/10/2025

(N.K.ரவிச்சந்திரன்)
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருப்பூர்.